# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.129/2025

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சந்திரசேகரன் | Father's Name | : | ராமச்சந்திரன் |
| Village | : | சமயபுரம் | Taluk | : | மண்ணச்சநல்லூர் |
| Calling | : | | Age | : | 37 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 24th day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது சமயபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சிறப்பு உதவி ஆய்வாளர் ராதாகிருஷ்ணன் கடந்த 08.05.2025 அன்று குடவாசல் காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது பெரும்பண்ணையூர் மருதமாணிக்கம் மேலத் தெருவைச் சேர்ந்த கலியமூர்த்தி மகள் தமிழ்செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று விசாரணைக்கு பின் 10.05.2025 அன்று 10.30 மணிக்கு குடவாசல் காவல் நிலைய கு.எண் 135/2025, பாநிச பிரிவுகள் 74, 75(2)ன்படி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:48:50 +0530

வழக்கு பதிவு செய்து உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். அவர் பதிவு செய்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3**. வழக்கு கோப்பினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.05.2025 அன்று பகல் 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அன்பரசு, ஜெயசீலன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4**. 10.05.2025 அன்று சாட்சிகள் தமிழ்செல்வி, தமிழரசி, கலியமூர்த்தி, புஷ்பவள்ளி, அன்பரசு, ஜெயசீலன், சிறப்பு உதவி ஆய்வாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 10.06.2025 அன்று எதிரி மீது பாநிச பிரிவுகள் 74, 75(2)ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் கொடுத்த புகாரினை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. சொன்ன தேதி, இடத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை எனவும் வழக்காவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.24 16:48:58 +0530

ஜோடிக்கப்பட்டவை எனவும் சொன்னால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:49:04 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.